THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE 5 – Commercial Insight for Management

**March 2017**

All Rights Reserved

# பிரிவு 1

**வினா 01**

1.1

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 1.2. சந்தைக் கொடைமுனைவுகளின் தன்மை | |
| **சரியான விடை: B** | |

1.2

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 1.4 வியாபாரங்களின் எதிர்காலப் போக்கு | |
| **சரியான விடை : C** | |

1.3

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 2.4 முகாமைத்துவ வகிபாகங்கள் | |
| **சரியான விடை : B** | |

1.4

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 2.8.1 பொருளாதார வளங்கள் அவற்றிற்கான ஊதியத்தினை இனங்காணல். | |
| **சரியான விடை : C** | |

1.5

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு :2.7.1 சந்தர்ப்பக் கிரயம் மற்றும் தட்டுப்பாடு எனும் கோட்பாடுகளையும் பொருளாதார தெரிவுகளில் அவற்றின் தொடர்பினையும் ஆராய்தல். | |
| **சரியான விடை : A** | |

1.6

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 3.9 போட்டி விசைகள் (Competitive forces) | |
| **சரியான விடை : A** | |

1.7

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 6.5.1 வியாபாரத்தில் அளவிடைச் சிக்கனம் மற்றும் நோக்கெல்லைச் சிக்கனம் ஆகிய கோட்பாடுகளை ஆராய்தல். | |
| **சரியான விடை : C** | |

1.8

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 6.11 சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்ட மூலகங்கள். | |
| கற்கைப் புத்தக தொடர்பு: பக்கம் 450 | |
| **சரியான விடை : D** | |

1.9

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 4.4.3 பொருளாதாரமொன்றில் பணநிரம்பல், பணவீக்கம், வட்டி வீதங்கள் ஆகியவற்றிற்கு இடையிலான இடைத்தொடர்பினை ஆராய்தல். | |
| **சரியான விடை : B** | |

1.10

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு : 6.7 வியாபாரத்தில் உற்பத்திக் கோட்பாடுகள் (Production concepts) | |
| கற்கைப் புத்தக தொடர்பு: பக்கம் 425 | |
| **சரியான விடை : A** | |

**(2 x 10 = மொத்தம் : 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

**வினா 02**

2.1

| கற்கை வெளிப்பாடு : 6.6.1 பிரதான உற்பத்தி முறைகளை (பணி உற்பத்தி, அணி உற்பத்தி மற்றும் பாய்வு உற்பத்தி) பொருள்வரையறை செய்தல் |
|---|
| **பணி உற்பத்தியின் குணாம்சங்கள்:**<br>• உற்பத்திப் பொருட்கள் நியமமற்றவை<br>• பொருட்கள் வாடிக்கையாளரின் கட்டளைகளுக்கு அமைய உற்பத்தி செய்யப்படும்.<br>• உற்பத்திப் பொருட்களின் வகைகள் அதிகளவில் வேறுபட்டவை.<br>• சிறிய கணியங்களில் ஒரே தடவையில் உற்பத்தி செய்யப்படும்.<br>**அணி உற்பத்தியின் குணாம்சங்கள்:**<br>• உற்பத்தி ஒரு தொகையாக இருக்கும்.<br>• ஒவ்வொரு அணியிலும் உருப்படிகள் நியமமானவையாக இருக்கும்.<br>• பொருட்களின் வகைகள் குறைந்த அளவிலேயே வேறுபடும். |

2.2

| கற்கை வெளிப்பாடு : 2.2 வினைத்திறனும் விளைவுத்திறனும் |
|---|
| வினைத்திறன் (efficiency) என்பது "விடயங்களை சரியாக செய்தல்" (doing things right)<br>வினைத்திறனானது, கிரயம் மற்றும் அடைபேறுக்கு (attainment) இடையில் தொடர்பினை அளவிடுகின்றது. மேலதிக செலவின்றி அடைபேறினை மேம்படுத்தல் அல்லது அடைபேறில் மாற்றமில்லாது செலவினை குறைத்தல் அல்லது இந்த இரண்டினதும் சேர்க்கை ஆகிய எல்லாமே வினைத்திறனில் அதிகரிப்பாகும்.<br><br>ஆனால் உற்பத்தித்திறனானது (productivity), உருவ வெளியீட்டிற்கும் வளங்களின் உள்ளீட்டிற்கும் இடையில் தொடர்பினை அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி வீதத்தினை குறிப்பிடுவதனால், ஒடுக்கமான பொருள்வரையறையை கொண்டது.<br>விளைவுத்திறன் (Effectiveness) என்பது எந்தளவுக்கு ஒரு செயற்பாடு அதன் குறிக்கோளை அல்லது எதிர்பார்த்த தாக்கத்தினை அடைந்துள்ளது என்பது பற்றியதாகும். சரியானதை செய்தல் |

2.3

| கற்கை வெளிப்பாடு : 2.8.2 பொருளாதார பொருட்களின் வகைகளை விபரித்தல் (சாதாரண பொருட்கள், ஜிபன் பொருட்கள், தரம்குறைந்த பொருட்கள், வெப்லென் பொருட்கள் மற்றும் பொதுவான பொருட்கள்). |
|---|
| பொதுவான பொருட்கள் என்பது எவரும் பணம் செலுத்தாது பயனடையக்கூடிய, விலக்க முடியாத (non-exclusive) பொருட்கள். இது இலவச சவாரிப் பிரச்சினையாகும்.<br>இவை வருமானம் தராததனால், இப் பொருட்களை உற்பத்தி செய்தல் நிறுவனங்களுக்கு பொருளாதார ஊக்குவிப்பை தருவதில்லை.<br>இலவச சவாரியிலிருந்து எவ்வாறு விடுபடுவது:<br>1. கட்டாயக் கொடுப்பனவு – தெருக்கள், அதிவேகப் பாதைகளை பயன்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் அல்லது அனுமதிச் சீட்டுக்களை அறிமுகப்படுத்தல்.<br>2. பணம் செலுத்தாதோரை விலக்குதல் - செய்மதித் தொலைக்காட்சியை பார்வையிட திறன் அட்டைகளை (smart card) பயன்பாட்டை அனுமதித்தல்.<br>3. பொது ஏற்பாடு – அரசாங்கம் சேவைகளை நேரடியாக வழங்கி பொதுமக்களிடருந்து வரி அறவிடுதல். |

NOT FOR SALE

2.4

கற்கை வெளிப்பாடு : 3.4.1 அளக்கத்தகு மற்றும் ஒப்புமையான பயன்பாட்டு கோட்பாடுகளை பயன்படுத்தி பகுத்தறிவான நுகர்வோரின் நடத்தையை இனங்காணல்.

நுகர்வோர் தமது வரையறுத்த வருமானத்தைக் கொண்டு தாம் அடையக்கூடிய மொத்தப் பயன்பாட்டை உச்சப்படுத்த முயற்சிப்பர். நுகர்வோன் ஒரு பொருளின் ஒரு அலகை வாங்குவதற்கு தீர்மானிக்கும்போது, அப் பொருளின் எல்லைப் பயன்பாடானது செலுத்தும் விலையின் மாற்றுப் பயன்பாட்டால் கிடைக்கும் எல்லைப் பயன்பாட்டைவிட அதிகமானதாக இருக்குமென தீர்மானிக்கின்றார்.

உதாரணம்: நுகர்வோனின் பகுத்தறிவு நடத்தையுடன் தொடர்புபட்ட ஏதாவது உதாரணம்.
ரூபா 500 இனை கொண்டுள்ள ஒரு நுகர்வோன் காலை ஆகாரத்தை வாங்க விரும்புவதாக கொள்க. ஆவர் வாங்குவதற்கு சோறு-கறி, இடியப்பம் அல்லது சிற்றுண்டிகள் என மாற்றுத் தேர்வுகள் உள்ளன. எனவே அவர் செலுத்தும் விலைக்கு அதிக எல்லைப் பயன்பாட்டை தரும் உணவை வாங்குவதற்கு தீர்மானிப்பார்.

2.5

கற்கை வெளிப்பாடு : 3.13 வழங்குனர்களும் வினியோகத்தர்களும்

அனுகூலங்கள்

- வழங்குனர்களுடன் பலமான உறவு
- சிறந்த தொடர்பாடலுக்கு வசதி செய்கின்றது
- போட்டி அனுகூலத்திற்கான சாத்தியமான மூலம்.
- வழங்குனர் தர உறுதிப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அதிகரித்த சந்தர்ப்பங்கள் காரணமாக சாத்தியமான மேன்மையான தர மூலங்கள்
- இரகசியத் தன்மையை வசதிப்படுத்துகின்றது
- சிக்கன அளவிடை (Economies of scale)

2.6

கற்கை வெளிப்பாடு : 4.3.2 தேசிய வருமானக் கோட்பாட்டினை (GDP, பெயரளவு மற்றும் உண்மை GNP மற்றும் NNP உட்பட) பொருள்வரையறை செய்தல்.

- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்பது பொருளியற் செயற்பாடுகளிலிருந்தான வருமானம்/இலங்கையில் பொருளாதார செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியின் மொத்தப் பெறுமதி ஆகும். (C+I+G+X-M)
- மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வெளிநாடுகளிலிருந்தான நிகர ஆதன வருமானம் செம்மையாக்கம் செய்யப்பட்ட பின்னர் மொத்த தேசிய உற்பத்தி பெறப்படும்.
- நிகர தேசிய உற்பத்தியானது, மொத்த தேசிய உற்பததிக்கு நிலையான மூலதன நுகர்வு மற்றும் தேசிய வளங்களின் அழிவுக்கு சேம்மையாக்கம் செய்வதளால் பெறப்படும்.

அல்லது

GDP+ வெளிநாட்டிலிருந்து நிகர ஆதன வருமானம் = GNP

GNP+ நிலையான மூலதன நுகர்வு மற்றும் தேசிய வளங்களின்அழிவு = NNP

NOT FOR SALE

2.7

கற்கை வெளிப்பாடு : 4.4.2 பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு கேள்வி முகாமை மற்றும் நிரம்பல் முகாமைக் கோட்பாடுகளை எவ்வாறு பயன்படுத்த முடியுமென விபரிக்குக.

- தொழில் வழங்க அதிக பணத்தை செலவிடுதல்
- நாட்டின் தனியார் துறையின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- தொழிற் திறமைகளை வளர்க்கும் பயிற்சிகளை ஊக்குவித்தல்
- தொழில் வழங்குனருக்கு உதவிக் கொடைகளை வழங்குதல்
- ஊழியர்கள் தொழில் மாற்றங்களை (labour mobility) ஊக்குவித்தல்

2.8

கற்கை வெளிப்பாடு : 6.16.1 மாற்றல் முகாமைத்துவ (change management) அடிப்படைக் கோட்பாடுகளை இனங்காணல்.

- போட்டியாளர்கள் என்ன செய்கின்றார்கள், வாடிக்கையாளர் எவற்றை கொள்வனவு செய்கின்றனர், சட்டத்தில் மாற்றங்கள், சமுதாய நடத்தை, பொருளாதார மாற்றம் போன்ற சூழல் மாற்றங்கள்.
- வுாடிக்கையாளர் கேள்விகளில் மாற்றங்கள், புதிய தொழில்நுட்பம் போன்றவற்றிற்கு பதிலிறுப்பாக நிறுவனம் உற்பத்திசெய்யும் பொருட்கள், வழங்கும் சேவைகளில் மாற்றங்கள்.
- தொழில்நுட்பம் மற்றும் தொழிற்படுத்தும் முறைகளில் மாற்றங்கள்.
- முகாமை மற்றும் தலைமைத்துவ பாங்கில் மாற்றம் போன்ற தொழில் உறவுமுறை மாற்றங்கள்
- நிறுவனத்தின் கட்டமைப்பு அல்லது அளவில் மாற்றங்கள்.
- சுவீகரிப்பின் பின்னர் – புதிய முகாமைத்துவமானது, புதிய மேன்னிலைக் கம்பனியின் கட்டமைப்பு மற்றும் முறைமைகளுக்கு ஏற்புடையதாக நிறுவனத்தை மேம்படுத்தி ஒருங்கிணைக்க விரும்புதல்.

2.9

கற்கை வெளிப்பாடு : 6.1.1 வியாபாரமொன்றின் பிரதான தொழிற்பாடுகள் மற்றும் முகாமைச் செயன்முறையில் அவற்றின் தொடர்பினை இனங்காணல்.

- **தொழிற்பாடுகள்** – பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியை கோரி வாடிக்கையாளர் கட்டளைகளை நிறைவு செய்வதற்கும், அவர்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் பொறுப்பாதல்.
- **சந்தைப்படுத்தலும் விற்பனையும் -** விற்பனைக் கட்டளைகளை பெறுவதற்கு ஏதுவாக, வாடிக்கையாளர் தேவைகளை இனங்காண்பதும், நிறுவன பொருட்களைப பற்றி வாடிக்கையாளருக்கு தெரிவிப்பதும்.
- **பொருள் மற்றும் சேவைகளின் விருத்தி** – விற்பனைக் கட்டளைகளை பெறுவதற்காக வாடிக்கையாளர் தேவைகளை நிறைவுசெய்யும் புதிய பொருட்களின் வடிவமைப்பிற்கு பொறுப்பாதல். **(**

NOT FOR SALE

2.10

| கற்கை வெளிப்பாடு : 6.3 வியாபாரங்களின் கிரயக் கோட்பாடு |
|---|
| நீண்டகால ஓட்டத்தில் மூலதன உபகரணம் உட்பட சகல உள்ளீடுகளும் மாற்றப்படக் கூடியன ஆதலினால், இந்த நீண்டகால ஓட்ட சராசரிக் கிரய வளையியின் வடிம் தொடர்பு பட்ட கோட்பாடானது அளவுத்திட்டம் தொடர்பான வருமானம் போன்றதாகும்.<br><br>அளவுத்திட்டம் தொடர்பான வருமானம், வெளியீட்டின் ஆரம்ப அதிகரிப்புடன் அதிகரித்து, சிறிது காலம் மாறாமல் இருந்து பின்னர் வீழ்ச்சியடையும். இதற்கான காரணம், நீண்ட காலவோட்ட ஆரம்பத்தில் உற்பத்தி அதிகரிக்கும்போது சராசரி உற்பத்திக் கிரயம் வீழ்ச்சி அடைந்து அளவுத்திட்ட வருமானம் அதிகரிப்பதால் ஆகும். அவ்வாறே, ஒரு குறிப்பிட்ட புள்ளிக்கு அப்பால் நீண்டகால ஓட்ட சராசரிக் கிரயம் அதிகரிப்பதனால், வீழ்ச்சியடையும் அளவுத்திட்ட வருமானம் மற்றைய காரணமாகும். . |




**(வளையி கேட்கப்படவில்லை)**

NOT FOR SALE

## பிரிவு 02

**வினா 03**

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 4.5 வியாபாரங்களில் நாணயமாற்று வீத முக்கியத்துவம் |

(a)

- ஏனைய நாடுகளின் பணவீக்க வீதத்துடன் ஒப்பிடுகையில் நாட்டின் பணவீக்க வீதம்.
- ஏனைய நாடுகளின் வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் நாட்டின் வட்டி வீதங்கள்.
- சென்மதி நிலுவை (balance of payment)
- ஊகநோக்கம் (Speculation)
- நாணயமாற்று வீங்களில் தாக்கம்செலுத்துவதில் தலையிடும் அரசாங்கக் கொள்கை

**(2 புள்ளிகள்)**

(b) ***அனுகூலங்கள்;***

- அரசாங்கம் அந்நிய நாணய ஒதுக்கங்களை வைத்திருக்க அல்லது அதற்கு செலவு செய்ய வேண்டியதில்லை.
- சென்மதிநிலுவைப் பற்றாக்குறை/மிகை சுயமாக திருத்தப்படும். பற்றாக்குறை நாணயமாற்று வீதம் வீழ்ச்சியுறச் செய்வதுடன், இது போட்டித் தன்மையை மேம்படுத்தி, ஏற்றுமதிகளை அதிகரித்து சமநிலையை மீண்டும் ஏற்படுத்தும்.
- நாணயமாற்று வீதத்தினை பேணுவதற்காக வேறு காரணங்களின் நிமிர்த்தம் விரும்பப்படாத பொருளாதாரக் கொள்கைகளை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய தேவை இல்லை.
- நாணயமாற்று வீதம் பொருளியற் புறநிலைகளை பிரதிபலிப்பதனால், அது வளங்களின் வினைத்திறனான ஒதுக்கங்களை ஊக்கப்படுத்துகின்றது.

**(2 புள்ளிகள்)**

***பிரதிகூலங்கள்***

- மிதப்பு நாணயமாற்று வீத முறைமையின் கீழ் நாணயமாற்று வீதமானது அதிகளவில் பெறுமதி அதிகரிக்குமேயாகில், நிறுவனங்களின் சர்வதேசமட்ட போட்டித் தன்மை குறைவடையக்கூடும். அதன் காரணமாக உற்பத்தியும் தொழில் வாய்ப்பும் நாடுமுழுவதும் வீழ்ச்சியடையக்கூடும்.
- நாணயமாற்று வீத ஏற்றத்தாழ்வின் நிட்சயமற்ற தன்மை வியாபாரங்களை ஊக்கமிழக்கச் செய்யக்கூடும்.
- அந்நிய நாணயமாற்று வீதங்கள் அதிகளவில் குறைவடைந்தால், இறக்குமதி விலைகள் அதிகரித்து அதன்காரணமாக பணவீக்கம் அதிகரிக்கக்கூடும்.
- மிதப்பு நாணயமாற்று வீத முறைமையின்கீழ் நாணய இடர் உச்சமடையும்.

**(2 புள்ளிகள்)**

(c) நாணயமாற்று வீதம் மூலப்பொருட்களை இறக்குமதிசெய்து உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிசெய்யும் நிறுவனங்களில் முக்கிய பாத்திரம் வகிக்கின்றது. பெறுமானத் தேய்வு காரணமாக:

- வெளிநாட்டு சந்தைகளில் உள்நாட்டுப் பொருட்கள் மலிவாகக் கிடைப்பதால் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் பயனடையும்.
- அந்நிய நாட்டுப் பொருட்கள் அதிக செலவாகும். எனவே, இறக்குமதிக்கான கேள்வி வீழ்ச்சியடைந்து உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களுக்கு கேள்வி அதிகரிக்கும்.
- மூலப்பொருட்களை இறக்குமதிசெய்யும் நிறுவனங்களில் இறக்குமதிக் கிரயம் அதிகரிப்பதனால், உற்பத்திக் கிரயமும் அதிகரிக்கும்.
- இது ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் நெகிழ்ச்சியில் தங்கியுள்ளது.

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் : 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**வினா 04**

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : |
| 5.2 நிறுவனக் கட்டமைப்பின் ஒழுங்காக்கம் |
| 5.3 அதிகாரம் (Authority), பொறுப்பு (responsibility) மற்றும் அதிகாரபலம் (power) |

(a)

- அதிகாரப் பகிர்வினை தடுத்தல்
- முயற்சிகளை தடுக்கும் வகையில் இறுக்கமான மேற்பார்வை மேற்கொள்ளப்படலாம்.
- ஒரே வேலை பல தொழிலாளர்கனினூடாக செல்கின்றது.
- நிருவாக மற்றும் மேந்தலைக் கிரயங்களை அதிகரிக்கச் செய்கின்றது.
- தந்திரோபாய உச்சமட்டம் பல மட்டங்களுக்கு அப்பால் இருப்பதால், தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பதிலிறுத்தல் மெதுவாகவே நடைபெறும்.

**(2 புள்ளிகள்)**

(b) (i)

முகாமை மட்டங்களை நீக்குதல் (Delayering) என்பது, கீழிருந்து மேல்நோக்கி முகாமை மட்டங்களின் எண்ணிக்கையை குறைத்தலாகும்.

**(1 புள்ளி)**

(ii)

- தகவல் தொழில்நுட்பம் - நடுமட்ட முகாமையாளர் தகவல் தயாரிக்கும் தேவையை இது குறைக்கின்றது.
- அதிகாரமளிப்பு (Empowerment) – அனேகமான அமைப்புக்கள், விசேடமாக சேவை நிறுவனங்கள் முடிந்தவரை கீழ்மட்டங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்க ஆவலாக உள்ளன. வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு பதிலிறுத்தலினை அதிகரிப்பதற்கு ஏதுவாக, தொழிற்பாட்டுத் தளத்தின் முன்வரிசைத் தொழிலாளர்கள் தீர்மானங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்
- பொருளியல் - முகாமை மட்டங்களை நீக்குதல் முகாமை/மேற்பார்வை கிரயங்களை குறைக்கின்றது.
- நாகரீகம் - முகாமைமட்டங்களை நீக்குதல் நாகரீகமாக கருதப்படுகின்றது. உயர்ந்த கட்டமைப்புக்கள் இயல்பாகாகவே நெகிழ்ச்சியற்றவை என நம்பும்பட்சத்தில் சிரேட்ட முகாமையாளர்கள் முகாமை மட்டங்களை குறைக்கக்கூடும்.

**(3 புள்ளிகள்)**

(c)

- அதிகாரத்திலுள்ள எந்தவொரு நபர் அல்லது குழுவினருக்கு தமது வேலைப்பளு தொடர்பில் பௌதிக மற்றும் மனம் தொடர்புபட்ட வரையறைகள் உள்ளன.
- முகாமையாளர் திட்டமிடல் போன்ற உயர்மட்ட பணிகளில் தீவிர கவனம்செலுத்த விடுவிக்கப்படுகின்றனர்.
- சில நிறுவனங்களின் அதிகரித்துவரும் அளவும், சிக்கற் தன்மையும் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய இரு துறைகளிலும் புலமையை தேவைப்படுத்தும்.
- பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரம் கீழ்மட்ட ஊழியர்களின் தொழிற் திருப்தி மற்றும் தொழில் விருத்திக்கு
- அதிகாரப்பகிர்வு, தீர்மானம் மேற்கொள்ளல் சங்கிலியை குறுகச்செய்து தீர்மானங்கள் அவை தேவைப்படும் நிலைகளின் அருகாமைக்கு கொண்டு வருகின்றது.

**(மொத்தம் : 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**வினா 05**

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : |
| 6.12 மனிதவள முகாமைத்துவத்தின் தன்மையும் நோக்கெல்லையும் |
| 6.13 போட்டிநிறைந்த காரணிச் சந்தையில் கூலியை தீர்மானித்தல் |

(a)

- அதிகரித்த உற்பத்தித் திறன் - ஊழியர் திறமையை விருத்தி செய்தல் ஊழியர்களை அதிக உற்பத்தித் திறன் உடையவர்களாக்கும்.
- அதிகரித்த குழுரீதியான கற்கை – ஊழியர்கள் பல திறமைகள் கொண்ட அணிகளில் வேலைசெய்கின்றனர். ஒவ்வொரு ஊழியரும் பல பணிகளில் தகுதியுடையவர்களாக இருக்கவேண்டும். சில ஊழியர் ஒன்றுசேர்ந்து குழுமமாக பணிபுரிய பயிற்றுவிக்கப் படுகின்றனர்.
- ஊழியர் புரள்வில் வீழ்ச்சி - ஊழியருக்கு பயிற்சியளித்து அவர்களை விருத்திசெய்தல் அனேகமாக ஊழியர் புரழ்வு வீதத்தினை வீழ்ச்சியடையச் செய்யும். ஊழியர் அதிக பயிற்சி பெறுவதனால், இது தொழிற்பாட்டு விளைவுத் திறன் மற்றும் இலாபத்திறனை அதிகரிக்கச் செய்கின்றது
- முயற்சியினை (initiative) ஊக்கப்படுத்துதல் - நிறுவனங்கள் அவற்றின் ஊழியர்களின் தற்போதைய மற்றும் அடையக்கூடிய இயலுமைகளை ஊக்கப்படுத்தி, பயன்படுத்தி கணிசமான அனுகூலங்களை பெறமுடியும்.

**(2 புள்ளிகள்)**

(b) ஊழியர் பற்றாக்குறையினை கையாளல்:

- அகத்தே மாற்றல்கள், பதவியுயர்வுகள் மற்றும் பயிற்சி வழங்கல் ஆகியன.
- வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு
- சாத்தியமான காரணங்களை மீளாய்வுசெய்து ஊழியர் புரள்வை குறைத்தல்.
- மேலதிக நேர வேலை
- அதிக ஊழியர் தேவையை குறைத்து உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு ஏதுவாக புதிய உபகரணங்களில் முதலிட்டு ஊழியருக்கு பயிற்சியளித்தல்.

ஊழியர் மிகையினை கையாள்தல்

- ஊழியர் எண்ணிக்கை குறைவடைய அனுமதித்தல்
- ஆட்சேர்ப்பினை மட்டுப்படுத்தல்
- முன்னர் முழுநேர ஊழியர்களுக்கு பகுதிநேர வேலையை அறிமுகப்படுத்தல்
- மிதமிஞ்சிய ஊழியர் நீக்கம் (Redundancies) – இறுதித் தீர்வாக, கவனமாக திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**(4 புள்ளிகள்)**

NOT FOR SALE

(c)

குறைந்தபட்ச ஊதியத்தின் நோக்கம், குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்கள் ஏற்கக்கூடிய வாழ்க்கைத்தரத்தை அடைவதற்கு போதுமான பணம் உழைப்பதனை உறுதி செய்வதாகும். இது அனேகமாக சந்தை விசைகளால் தீர்மானிக்கப்படும் நடப்புக் ஊதியத்திலும் பார்க்க அதிகமானதாக இருக்கும்.

இதன் தொடர்விளைவுகள் கீழ்வருமாறு விபரிக்கப்படலாம்:




குறைந்தபட்ச ஊதியம் இல்லாதபோது, Qw எண்ணிக்கையான ஊழியர்கள் W கூலிவீதத்தில் வேலையில் அமர்த்தப்படுவர்.

குறைந்தபட்ச கூலியின் (M) விளைவாக மிகையான ஊழியர் நிரம்பல் காணப்படுவதனால், அது Qu - Qm. இடையில் வித்தியாச அளவுக்கு தொழில்வாய்ப்பின்மையை ஏற்படுத்தும். மாறாக, ஊழியருக்கான கேள்வி குறைவடைந்து அதனால் வேலை இழப்புக்கள் ஏற்படும்.

எனினும், குறைந்தபட்ச ஊதியம் விதித்தல், உண்மையில் ஊழியர் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் சான்று உள்ளது. இது கூலியின் ஏகஉரிமைக் கொள்வனவாளர் (monopoly purchasers) காரணமாக ஏற்படுவதுடன், இது குறிப்பாக கீழ்மட்ட ஊழியர் சந்தையில் காணப்படும். அத்தகைய தொழில் வழங்குனர்கள் ஊதியத்தினை குறைந்த மட்டத்தில் பேணும்போது, அவர்களுக்கு தொழில்புரிதல் கவர்ச்சி இல்லாததால், பொதுவாக வெற்றிடங்கள் ஏற்படும். சட்டம் அதைவிட அதிகமான ஊதிய வீதத்தினை விதிக்கும்போது அவர்களுக்க வேலைக்கு ஆட்சேர்த்தல் இலகுவாக இருப்பதுடன், சம்பளப் பட்டியலில் ஊழியர் எண்ணிக்கை உண்மையில் அதிகரிக்கக்கூடும். அவர்களின் ஊழியர்களுக்கான தேவையானது, ஊழியர் எண்ணிக்கையில் வீழ்ச்சிக்கு வழியேற்படுத்தும் சந்தை விசைகளை அப்புறப்படுத்தி, அதிகரிப்பினை ஏற்படுத்தும்.

**(மொத்தம் : 10 புள்ளிகள்)**



NOT FOR SALE

**வினா 06**

கற்கை வெளிப்பாடு :
3.11 சந்தைக் கட்டமைப்பின் கோட்பாட்டு ரீதியான பண்புகள்
3.12 போட்டிச் சந்தைக் கட்டமைப்பில் உத்தம உற்பத்தி, விலை மற்றும் இலாப தீர்மானம்

(a)

- பொருட்கள் வேறுபடுத்தப்பட்டிருக்கும் - நிடமாகவோ அல்லது கற்பனையாகவோ
- நிறுவனங்கள் விலையை நிர்ணயிப்போர் எனும் தமது நிலையை தக்கவைப்பதற்கு ஏதுவாக விலைப் போட்டியினை தவிர்க்க முயல்வர். (விலைசாராத போட்டி)
- கணிசமான பிரசேச தடைகள் இன்மை – நிறுவனங்கள் சந்தையில் பிரவேசிக்கவும் சந்தையிலிருந்து வெளியேறவும் தடைகள் இல்லாமை. அத்துடன், உற்பத்திக் காரணிகளின் இடமாறல்களுக்கு வரையறுப்புக்கள் இல்லாமை
- தொழிற்துறையில் அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் இருத்தல்

**(3 புள்ளிகள்)**

நிறைபோட்டிச் சந்தையொன்றின் நீண்டகால சமநிலை கீழ்வருமாறு விளக்கப்படலாம்:




மேற்படி வரிப்படத்திலிருந்து நிறுவனம் அதன் அதிகூடிய கிரய விளைதிறனைக் கொண்ட (அதாவது, சராசரிக் கிரயத்தின் அதிதாழ்ந்த) புள்ளியில் தொழிற்படுவது சான்றாகும். இது உற்பத்தி வினைத்திறன் (productive efficiency) எனப்படும். ( அதிகுறைந்த கிரயம்)

மேலும் விலையானது எல்லைக் கிரயத்திற்கு சமமாக இருப்பது ஒதுக்க வினைத்திறனை (allocative efficiency) காட்டுகின்றது. P= MC

நிறைபோட்டியில் நீண்ட காலவோட்ட சமநிலைப்புள்ளி மாத்திரம் ஒதுக்க வினைத்திறனை அடைவதனால், இது தனித்துவமானதாகும். நீண்ட காலவோட்டத்தில் தொழிற்துறையிலுள்ள சகல நிறுவனங்களுக்கும் MR=MC=AC=AR = Qm இல் விலை ஆக இருக்கும். நீண்ட கால ஓட்டத்தில் உற்பத்தி மற்றும் ஒதுக்க வினைத்திறன்கள் இரண்டுமே அடையப்பெறுவதனால் நிறைபோட்டிச் சந்தை அதிகம் விரும்பப்படும் சந்தையமக கருதப்படுகின்றது.

**(4 புள்ளிகள்)**

NOT FOR SALE

(c)

தரப்பட்ட தரவுகளின்படி, காலைஆகார தானியத் தொழிற்துறையானது ஏகஉரிமைப் போட்டி சந்தையொன்றில் தொழிற்படுகின்றது.

வளங்களின் விரயம் கீழ்வரும் காரணங்களால் ஏற்படுகின்றது:

- ஏகஉரிமைப் போட்டியின்கீழ் இலாபம் உச்சப்படுத்தும் உற்பத்தியானது, நிறைபோட்டி சந்தையில் இலாபம் உச்சப்படுத்தற் உற்பத்தியிலும் குறைவானது. இந்த உற்பத்தி சராசரிக் கிரயம் அதிகுறைந்த அளவினை எட்டும் உற்பத்தியில் அல்ல. (அதாவது ஏகஉரிமை போட்டியில் நிறுவனங்கள் **உற்பத்திரீதியாக வினைத்திறனற்றவை**).

- ஒரே பொருளை பலவித வேறுபடுத்திய உருப்படிகளாக (differentiated versions) உற்பத்திசெய்வது விரயமானது. ஒரு பொருளை ஒரேவித உருப்படிகளாக உற்பத்தி செய்வதன் மூலமாக நிறுவனங்கள் அதிக அளவினை உற்பத்திசெய்து அளவிடைச் சிக்கனத்தை அடையக்கூடியதாக இருக்கும்.

- பொருட்களை வேறுபடுத்த பயன்படுத்தும் சில முறைகள் வளங்களின் விரயத்திற்கு இட்டுச்செல்கின்றன. பொருட்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் விளம்பரப்படுத்தல் போன்றவை பொருட்களுக்கு பெறுமதி சேர்ப்பதில்லை ஆதலால் இவை வளங்களின் விரயமே.

**(3 புள்ளிகள்)**

**(மொத்தம் : 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 3

**வினா 07**

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : |
| 3.5 போட்டிச் சந்தையொன்றில் கேள்விஈ நிரம்பல் மற்றும் சந்தைச் சமநிலை |
| 3.6 நெகிழ்ச்சிக் ( elasticity) கோட்பாடு |
| 3.7 போட்டிச் சந்தையில் அரசாங்கத் தலையீட்டின் தாக்கம் |
| 3.8 போட்டியாளர்களும் நிறுவனங்களில் அவர்களின் தாக்கங்களும் |
| 4.2 அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல் |

(a)
100,000-140P = 20,000+20P
80,000 = 160P
ரூபா 500 = P

100,000-140*500 = Qd
30,000 மெட்ரிக் தொன்கள் =Qd

(b)
உலகசந்தையில் நிலவும் புறநிலைகள் கீழே குறிப்பிட்ட காரணங்களுக்காக இறப்பருக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்யும்;

- வாழ்க்கைத் தரத்தில் அதிகரிப்பினால், வாகனங்களுக்கான கேள்வி அதிகரித்தல்
- உலக எண்ணெய் விலையில் மாற்றங்களுக்கு அமைய செயற்கையிழை இறப்பரின் விலைகள் ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்படுதல்.
- இறப்பர் உற்பத்தியில் எதிர்பார்க்கும் வீழ்ச்சி காரணமாக, இயற்கை இறப்பருக்கான ஊகநோக்குக் கேள்வி

  இதன்விளைவாக இயற்கை இறப்பருக்கு கேள்வி D1 இலிருந்து D2 க்கு அதிகரிக்கும்.

அத்துடன், பாதகமான காலநிலை காரணமாக இயற்கை இறப்பரின் உற்பத்தி வீழ்ச்சியும், தொழிலாளர்களை பெறுவதில் சிக்கலும் இறப்பரின் நிரம்பலில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். எனவே, நிரம்பல் $S_1$ இலிருந்து $S_2$ க்கு வீழ்ச்சியடையும்.
இவற்றின் விளைவாக இயற்கை இறப்பரின் விலை அதிகரிக்கும்.






NOT FOR SALE

(c)

(i) இயற்கை இறப்பரும் செயற்கை இழைஇறப்பரும் பிரதியீட்டுப் பண்டங்கள் ஆதலால் கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சி நேரானதாகும்.

(ii) வாகனங்களும் ரையர்களும் கூட்டுப் பொருட்கள் ஆதலினால் கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சி மறையானதாகும்.

(d)

(i) மானியம் (subsidy) என்பது குறித்த பொருளின் உற்பத்தி அதிகரிப்பை ஊக்குவிப்பதற்காக அல்லது முக்கியமான தொழிற்துறையை பாதுகாப்பதற்காக வழங்குனருக்கு அரசாங்கம் வழங்கும் கொடுப்பனவாகும். முானியம் வழங்குவதன் தாக்கம் கீழ்வருமாறு காட்டப்படலாம்:




மானியம் வழங்கப்படமுன்னர் சமநிலை விலையும் கணியமும் முறையே P மற்றும் Q ஆகும். மானியக் கொடுப்பனவு நிரம்பல் வளையியை கீழ்நோக்கி $S_1$ க்கு நகர்த்துகின்றது. அதன் விளைவாக, வழங்குனர்கள் இப்போது குறைந்த விலையான P1 க்கு கணியம் Q1 இனை உற்பத்தி செய்ய விரும்புவர்.
எனவே, மானியம் காரணமாக நுகர்வோர் பெறும் பயன் $P_1$PFB, ஆகவும் உற்பத்தியாளர் பெறும் பயன் PCAF ஆகவும் இருக்கும். மானியம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டதும், அது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும்.

இருந்தபோதிலும், நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் பெறும் பயன்களின் அளவு, சார்பு நெகிழ்திறனில் (relative elasticity) தங்கியுள்ளது.

(ii) சமநிலை விலைக்கு மேலாக குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கவேண்டும். கேள்விக் கணியம் வீழ்ச்சியடையும். எனினும் அதிகரித்த விலையானது அதிக நிரம்பலை ஊக்குவிப்பதால், நிரம்பற் கணியம் அதிகரிக்கும். எனவே மிகையான நிரம்பல் காணப்படும்.

குறைந்தபட்ச விலையில் விற்பனை செய்யக்கூடியதிலும் பார்க்க அதிகளவான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால் மிகைக் கணியம் அதிகரிக்கும். எனவே, மிகையான நிரம்பல் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படலாம்.

NOT FOR SALE

(e) ஒரு அரசியற் சூழல் வியாபாரங்களை பலவழிகளில் பாதிக்கலாம்.

- அவற்றின் இருப்புக்கான அடிப்படை சட்ட வேலைச்சட்டகத்தை தயாரித்தல்.
- வியாபாரங்களுக்கான நேரடித் தொடர்புகளை வழங்குவதில் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட நிலையில் பங்குகொள்ளலாம்.
- பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நடத்தையும் வியாபாரங்களுக்கு மிகவும் தொடர்புபட்டதாகும்.
- சில அரசாங்க கொள்கைகள் நிறுவனங்கள் தமது இயலளவை அதிகரிக்க ஊக்குவிக்கும். உதா: ஏற்றுமதிகளுக்கு வரிவிதிக்காமை. நடைமுறையல்லா சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு மூலதனப்படி வழங்குதல்.
- சட்டவாக்கம், வரி நிவாரணம், மானியங்கள் மூலம் அரசாங்கம் கேள்வியில் தலையீடு செய்யமுடியும்.
- அரசாங்கம் தொழிற்துறை முழுவதையும் ஊக்குவிக்கலாம்.
- ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படத்த முடியும்.

**(மொத்தம் : 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளு அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

---